திரு. வே. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1995-96ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 73 முதல் 76 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) கடல் சார் வாரியச் சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்), 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் சார் வாரியச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் சார் வாரியச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.